# மரபுத்தொடர்

## தரம் – 10

க.சுகந்தி

கே/தெஹி/ தெஹியோவிட்ட த.ம.வி

( தேசிய பாடசாலை)

## மரபுத்தொடர்

**ஒரு சொல் அல்லது சொற்றொடர் அதன் நேர்பொருளை உணர்த்தாமல் வழி வழியாக (மரபு வழியாக) வழங்கிவரும் பொருளை உணர்த்துவது மரபுத்தொடர் எனப்படும்.**

பொதுவாக வழங்கும் மரபுத் தொடர்கள் , சமூகத்திற்கு சமூகம் வழங்கப்படும் மரபுத்தொடர்கள் எனும் அடிப்படையில் பல மரபுத்தொடர்கள் தமிழில் காணப்படுகிறன.

**அ**

| | |
|---|---|
| 01 . அள்ளிக் குவித்தல் - | நிறையச் சம்பாதித்தல் |
| 02 . அறைகூவுதல்- | போருக்கு அழைத்தல் |
| 03 . அரை மனிதன் - | மதிப்பில்லாதவன் |
| 04 . அண்டப்புழுகன்- | பொய்காரன் |
| 05. அலைக்கழித்தல்- | அலட்சியம் செய்தல் |
| 06. அறுதியிடுதல் - | முடிவுகட்டுதல் |
| 07. அகடவிகடம்- | தந்திரம் |
| 08. அரைப்படிப்பு - | நிரம்பாத கல்வி |
| 09. அடியொற்றுதல்- | பின்பற்றுதல் |
| 10. அள்ளியிறைத்தல் - | அளவுக்கு மேல் செலவு செய்தல் |
| 11. அடுக்கு பண்ணுதல் - | ஆயத்தம் செய்தல் |
| 12. அடியிடுதல் - | தொடங்குதல் |
| 13. அடிநகர்தல்- | இடம்பெயர்தல் |
| 14. அடிபிழைத்தல் - | நெறி தவறி நடத்தல் |
| 15. அடி திரும்புதல்- | பொழுது சாய்தல் |
| 16. அடிப்பிடித்தல்- | தொடருததல் |
| 17. அடி பிறக்கிடுதல் - | பின்வாங்குதல் |
| 18. அரக்கப் பறக்க - | விரைவாக |
| 19. அடியுறைதல் - | வழிப்படுத்தல் |

20. அவசரக்குடுக்கை - பதற்றக்காரன்

21. அகலக் கண் வைத்தல் - அளவு கடந்து போதல்

22. அழுங்குப்பிடி - விடாப்பிடி

23. அறுதியிடல் - முடிவு கட்டுதல்

24. அமளி செய்தல் - குழப்பம் செய்தல்

25. அடி பணிதல் - கீழ்ப்பணிதல்

26. அடி விளக்குதல் - தன் மரபை புகழ்பெறச் செய்தல்

27. அகலக் கால் வைத்தல் - அளவுகடந்து போதல்

**ஆ**

28. ஆகாயக் கோட்டை - மிதமிஞ்சிய கற்பனை

29. ஆறப்போடல் - பிற்போடல்

30. ஆசை வார்த்தை - ஏமாற்றுப் பேச்சு

31. ஆட்கொள்ளல் - அடிமை கொள்ளல்

32. ஆழம் பார்த்தல் - ஒருவரின் தகுதி பற்றி ஆராய்தல்

33. ஆயிரம்காலத்து பயிர் - நெடுங்காலம் நிலைத்திருத்தல்

34. ஆடாபூதி - ஏமாற்றுக்காரன்

**இ**

35. இரண்டும் கெட்டான் - நன்மை தீமை அறியாதவன்

36. இலை மறை காய் - வெளிப்படாது மறைந்திருத்தல்

37. இளிச்சவாயன் - எளிதில் ஏமாறுபவன்

38. இட்டுக்கட்டுதல் - இல்லாததை சொல்லுதல்

39. இலவு காத்த கிளி - காத்திருந்து ஏமாறுதல்

40. இரண்டு தோணியில் கால் வைத்தல் - ஒரே நேரங்களில் இரு செயல்களில் ஈடுபடல்

ஈ

41. ஈரல் கருகுதல் - வேதனை மிகுதல்

42. ஈவிரக்கம் - கருணை

43. ஈயோட்டுதல் - தொழிலெதுவுமின்றி இருத்தல்

44. ஈடேறுதல் - உயர்வடைதல்

உ

45. உள்ளங்கையில் நெல்லிக்கனி - வெளிப்படையாக தெரிதல்

46. உதவாக்கரை - பயனற்றவன்

47. உப்பில்லாப் பேச்சு - பயனற்ற பேச்சு

48. உச்சி குளிர்தல் - மிக்க மகிழ்ச்சி அடைதல்

49. உருக்குலைதல் - தன்னிலையிலிருந்து மாறுபடல்

50. உலை வைத்தல் - பிறருக்கு அழிவு வருவித்தல்

**அடி பற்றிய மரபுத்தொடர்கள்**

01. அடியொற்றுதல் - பின்பற்றுதல்

02. அடிநகர்தல் - இடம்பெயர்தல்

03. அடிபணிதல் - கீழ்ப்படிதல்

04. அடி விளக்குதல் - தன் மரபை புகழ்பெறச்செய்தல்

05. அடியிடுதல் - ஆரம்பித்தல்

**கண் பற்றிய மரபுத்தொடர்கள்**

01. கண் வைத்தல் - விருப்பம் கொள்ளுதல்

02. கண்வளர்தல் - நித்திரை செய்தல்

03. கண்ணெறிதல் - கடைக்கண்ணால் பார்த்தல்

04. கண்கலத்தல் - ஒருவரை ஒருவர் விரும்புதல்

05. கண்மூடுதல் - இறத்தல்

06. கண் திறத்தல் - அறிவுண்டாதல்

**கழுத்து பற்றிய மரபுத்தொடர்கள்**

01. கழுத்துக்கொடுத்தல் - பிறர் துன்பத்தில் உதவுதல்

02. கழுத்தறுத்தல் - நம்பிக்கை துரோகம் செய்தல்

03. கழுத்திற்கட்டுதல் - வலிந்து திணித்தல்

04. கழுத்தைக்கட்டுதல் - விடாமல் நெருக்குதல்

**காது பற்றிய மரபுத்தொடர்கள்**

01. காது கொடுத்தல் - அவதானித்தல்

02. காது குத்துதல் - ஏமாற்றுதல்

03. காதில் ஓதுதல் - கோள் சொல்லுதல்

04. காதைக்கடித்தல் - இரகசியம் கூறல்

## கால் பற்றிய மரபுத்தொடர்கள்

01. கால் பின்னுதல் - தடைப்படல்
02. கால் பிடித்தல் - காலைப் பற்றிக் கெஞ்சுதல்
03. கால் கொள்ளுதல் - ஆரம்பித்தல்
04. காலைச்சுற்றுதல் - பற்றித் தொடர்தல், தொடர்ந்து பற்றுதல்
05. காலாறுதல் - ஓய்ந்திருத்தல்
06. கால் ஊன்றுதல் - நிலை பெறுதல்
07. காலில் விழுதல் - மன்னிப்பு கேட்டல்

## வயிறு பற்றிய மரபுத் தொடர்கள்

01. வயிற்றை கட்டுதல் - செலவைச் சுருக்குதல்
02. வயிற்றிலடித்தல் - சீவனத்தை கெடுத்தல்
03. வயிறு வளர்த்தல் - எவ்வாறோ பிழைத்து கொள்ளுதல்
04. வயிறு கிள்ளுதல்,வயிறு கடித்தல் - பசியுண்டாகுதல்
05. வயிறு குளிர்தல் - திருப்தி அடைதல்
06. வயிறு எரிதல் - பொறாமை கொள்ளுதல்

**வாய் பற்றிய மரபுத்தொடர்கள்**

01. வாய் விடுதல் - வெளிப்படையாக கேட்டல்

02. வாய் புலம்பல் - பிதற்றுதல்

03. வாய் திறத்தல் - பேசத்தொடங்குதல்

04. வாய்ப்பூட்டுப் போடுதல் - பேசாது தடுத்தல்

05. வாயில் மண் போடுதல் - கேடு விளைவித்தல்

**கை பற்றிய மரபுத்தொடர்கள்**

01. கை கழுவுதல் - முற்றாய் விலகல்

02. கை கூடல் - அனுகூலமாதல்

03. கையிடல் - ஆரம்பித்தல்

04. கை நீட்டுதல் - அடித்தல்

05. கைபிசைதல் - செய்வதறியாது திகைத்தல்

06. கை தளர்தல் - வறுமையாதல்

07. கை கொடுத்தல் - உதவி செய்தல்

08. கை மிகுதல் - அளவு கடத்தல்

09. கைகலப்பு - சண்டை

10. கையளித்தல் - ஒப்படைத்தல்

**செவி பற்றிய மரபுத்தொடர்கள்**

01. செவி கொடுத்தல் - கவனித்து கேட்டல்

02. செவிக்கேறுதல் - கேட்பதற்கு இனிமையாக இருத்தல்

**தலை பற்றிய மரபுத்தொடர்கள்**

01. தலைகாட்டுதல் - வெளிவருதல்

02. தலை கீழாய் நடத்தல் - முறை தவறி நடத்தல்

03. தலைக்கொழுப்பு - தான் என்ற அகந்தை

04. தலைப்பாரம் - தான் என்ற அகந்தை

05. தலை வீக்கம் - தான் என்ற அகந்தை

06. தலைக்கணம் - தான் என்ற அகந்தை

07. தலைகீழாய் நிற்றல் - பிடிவாதம் பிடித்தல்

08. தலைப்படுதல் - மேற்கொள்ளுதல்

09. தலைமறைவு - ஒளிந்திருத்தல்

**தோள் பற்றிய மரபுத்தொடர்கள்**

01. தோளிலிருந்து செவிகடித்தல் - ஆதரிப்பவரை வஞ்சித்தல்

02. தோள் மாற்றுதல் - பிறர் சுமையை தான் சுமத்தல்

03. தோள் கொடுத்தல் - உதவி செய்தல்

## நா பற்றிய மரபுத்தொடர்கள்

01. நாக்கு வளைத்தல் - பழித்தல்
02. நாக்கு நீழுதல் - அடக்கமின்றி பேசுதல்
03. நாக்கு விழுதல் - பேச நாவெழாமல் போதல்
04. நாக்கடைத்தல் - பேச முடியாது இருத்தல்
05. நாக்குத்தவறுதல் - பேச்சுறுதி தவறுதல் / பொய் சொல்லுதல்
06. நாக்குப் புரளுதல் - பேச்சுறுதி தவறுதல் / பொய் சொல்லுதல்
07. நாக்குத்தப்பல் - பேச்சுறுதி தவறுதல் / பொய் சொல்லுதல்

## பல் பற்றிய மரபுத்தொடர்கள்

01. பல் இழித்தல் - பல்லைக்காட்டி கெஞ்சுதல் , ஏளனம் செய்தல்
02. பல்லைக்கடித்தல் - துன்பம் தருவதை சகித்து கொள்ளல்
03. பல்லைப் பிடுங்குதல் - சக்தியை அடக்குதல்